**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 134/2019** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | Prosecution : | **PW - 3** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | பாலா |
| Father / Husband Name | : | அழகர்சாமி |
| Village | : | ஆதிமாரியம்மன் கோவில் ரோடு, காமராஜ் நகர், கீழவாசல், |
| Taluk | : | தஞ்சாவூர் |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | ேஹாட்டல் உரிமையாளர் |
| Age | : | 42/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். செழியன்,** தட்டச்சர்

**<u>C.C No.134/2019 06.09.2022</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.30**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சொந்தமாக ராஜகிரியில் ேஹாட்டல் வைத்து நடத்தி வருகின்றேன். அ.சா.1 சுகுமார் என் நண்பர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் ஆட்டோ ஓட்டி வருகின்றார். கடந்த 19.05.2018 ம் தேதி மாலை 4.00 மணியளவில் அ.சா.1 க்கு சொந்தமான பட்டரை அருகே நானும் துரைசிங்கம் ஆகியோர் நின்று பேசிக் கொண்டு இருந்தோம். அப்போது அ.சா.1 ன் பட்டரையில் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது அ.சா.1 ன் இடது புற பின் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்து கொண்டு இருந்தது. என்னவென்று விசாரித்தபோது ஆஜர் எதிரி ரூ.10,000/- அ.சா.1 னிடம் கடனாக கொடுத்ததாகவும்,

**C.C No.134/2019 06.09.2022**

எதிரி தன்னை தாக்கியதாக கூறினார். நாங்கள் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அங்கு இல்லை. பின்னர் அ.சா.1யை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். சம்பவம் குறித்து போலீசார் மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

அ.சா.1 சொன்னதின் அடிப்படையில்தான் சம்பவம் குறித்து எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா.1யை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். நான் அவசரமாக வண்டிக்கார தெருவில் உள்ள ஸ்டாண்டில் ஆட்டோவை அழைத்துச் சென் றோம். அப்போது எனது சட்டையில் ஒரே ரத்தமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். இது குறித்து நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். போலீஸ் விசாரணையில் அவ்வாறாக கூறவில்லை என்றும் தற் போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முன் விசாரணையில் கூறியுள்ளதுபோல் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்பதை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் எது வும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 பட்டறையில் இரும்பு ஜாமான்கள் சிதறி கிடக்கும் என்றும், அவர் தடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 எதிரிக்கு தர வேண்டிய பணத்தை தராமல் அவரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக முடிவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 134/2019** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | Prosecution | : | **PW - 4** |
| | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | : | துரைசிங்கம் |
| Father / Husband Name | : | சண்முகம் |
| Village | : | 144N. புது ஆற்றுபாலம், No.1, நாகை ரோடு, வண்டிக்காரத் தெரு, |
| Taluk | : | தஞ்சாவூர் |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | Motor Head Mechanic |
| Age | : | 40/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். செழியன்,** தட்டச்சர்

**<u>C.C No. 134/2019 06.09.2022</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.45**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சாந்தபிள்ளை கேட்டில் Motor Head Mechanic பட்டரையில் வேலை செய்து வருகின்றேன். அ.சா.1 சுகுமார் என்பவரை எனக்கு தெரி யும். அவருடைய பட்டரையில்தான் வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.05.2018 ம் தேதி மாலை 4.00 மணியளவில் நான் சாப்பிட்டுவிட்டு பட்டரைக்கு வந்தபோது ஆஜர் எதிரி அரிவாளால் அ.சா.1 யை இடது புற காது அருகே பின் தலையில் வெட்டி இரத்தக் காயம் ஏற்படுத்தினார். எதிரி ஆட்டோவை எடுத்துக் கொண்டு அங்கிருந்து

**C.C No. 134/2019   06.09.2022**

ஓடிவிட்டார். பணம் சம்மந்தமாக ரூ.10,000/- பைனான்ஸ் கொடுத்தது சம்மந்தமாக அதை எதிரி அ.சா.1 னிடம் கேட்டு பிரச்சனை ஏற்பட்டதாக அ.சா.1 கூறினார். பின்னர் அ.சா.1 யை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆட்டோ மூலம் நானும், பாலா, சதீஸ்குமார், அத்தா என அழைக்கப்படும் பக்கத்து தெருவாசி ஒருவர் ஆகியோர்கள் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். நானும் பாலாவும் முன்னதாக மருத்துவமனையில் அனுமதித்தோம். மற்ற இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் பின்னால் வந்தார்கள். இச்சம்பவம் குறித்து போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நானும் பாலா என்பவரும் அ.சா.1 யை ஆட்டோவில் அழைத்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்த விபரத்தை போலீஸ் விசாரணையில் நான் கூறியுள்ளேன். அ.சா.1 எனது நண்பர் என்பத ால் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவரை உள்நோயாளியாக நானும் பாலாவும் சேர்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையின்போது ஆஜர் எதிரியை அ.சா.1 யை வெட்டிவிட்டு ஆட்டோவில் தப்பிச் சென்றதாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரி தப்பிச் சென்ற ஆட்டோ பதிவு எண்ணை நான் போலீஸ் விசாரணையின்போது கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நானும், அ.சா.1 மற்றும் சதீஸ் ஆகியோர்கள் சேர்ந்து ஒரே பட்டரையில்தான் பணி செய்து வருகின்றோம். இந்த விபரத்தை நான் போலீஸ் விசாரணையின் போது கூறியுள்ளேன். அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டு இரத்தம் கீழே வழிந்தது என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்துதான் விசாரித்தார்கள். அப்போது இரத்தம் சிந்தியுள்ள இடத்தை போலீஸ் விசாரணையின்போது காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். அந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு மாதிரி எதுவும் எடுத்துச் செல்லவில்லை. எனக்கும், அ.சா.1, சதீஸ் ஆகியோர்கள் தனித்தனியாக பட்டரை வைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. போலீஸ் விசாரணையின் போது நான் சாப்பிட்டுவிட்டு சம்பவ இடத்திற்கு

**C.C No. 134/2019   06.09.2022**

வந்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அ.சா.1 எனது நண்பர் என்பதால் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக முடிவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C No. 119/2009** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | | Prosecution : | **PW - 7** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | அன்பரசன் | |
| Father / Husband Name | : | கோவிந்தராஜன் | |
| Village | : | 23/9. சுந்தரம் நகர், மருத்துவக் கல்லூரி சாலை, | |
| Taluk | : | தஞ்சாவூர் | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | வழக்கறிஞர் | |
| Age | : | 66/2022 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். செழியன்,** தட்டச்சர்

**C.C No.119/2009 06.09.2022 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.05**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வழக்கறிஞராக பணியாற்றி வருகின்றேன். அ.சா.1 முகமது பாரூக் என்பவரை எனக்கு தெரியும். அவர் என்னிடம் கையொப்பம் பெறுவதற்காக கடந்த 15, 16 வருடங்களுக்கு முன்பாக என்னிடம் வந்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவை என்னுடையதுதான். **(அ.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் உள்ள அனைத்து பக்கங்களிலும் பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவைகள் அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம்

**C.C No.119/2009   06.09.2022**

காட்டப்படும் அ.சா.ஆ.3 தனி அதிகார ஆவணத்தில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவை என்னுடையதுதான். (**அ.சா.ஆ.3 தனி அதிகார ஆவணத்தில் அனைத்து பக்கங்களில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவைகள் அ.சா.ஆ 27 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 4 மெய்யப்பன் என்பவர் கொடுத்த தனி அதிகார ஆவணத்தில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவை என்னுடையதுதான். (**அ.சா.ஆ.4 மெய்யப்பன் என்பவர் கொடுத்த தனி அதிகார ஆவணத்தில் அனைத்து பக்கங்களில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவைகள் அ.சா.ஆ 28 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.5 தஞ்சாவூர் உள்ளூர் திட்ட குழுமத்தின் லே அவுட் (Layout) ஆவணத்தில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவை என்னுடையதுதான். (**அ.சா.ஆ.5 தஞ்சாவூர் உள்ளூர் திட்ட குழுமத்தின் லே அவுட் அனைத்து பக்கங்களில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவைகள் அ.சா.ஆ 29 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.12 தஞ்சாவூர் டவுன் சர்வே ரிஜிஸ்டர் எக்ஸ்டாக்டில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவை என்னுடையதுதான். (**அ.சா.ஆ.12 தஞ்சாவூர் டவுன் சர்வே ரிஜிஸ்டர் எக்ஸ்டாக்டில் உள்ள பச்சை மையில் உள்ள கையொப்பம் மற்றும் சீல் ஆகியவைகள் அ.சா.ஆ 30 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்படி ஆவணங்களில் அ.சா.1 முகமது பாருக் அவர்கள் என்னிடம் உண்மை நகல் Attestation பெறுவதற்காக அசல் ஆவணங்களை காண்பித்து கையொப்பம் பெற்றுக் கொண்டார். இது சம்மந்தமாக மாவட்ட குற்ற பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

முதல் விசாரணையில் கூறிய ஆவணங்களை Attestation பெற்றது அ.சா.1 முகமது பாருக் என்பவர்தான் என்றால் சரிதான். அ.சா.ஆ.26 முதல் அ.சா.ஆ.28 வரையுள்ள ஆவணத்தில் அதிகாரம் அளித்த நபர்கள் யாரையும் எனக்கு தெரியாது.

**C.C No.119/2009   06.09.2022**

மேற்கண்ட ஆவணத்தின் உண்மை தன்மை மற்றும் நம்பக தன்மை குறித்து எனக்கு தெரியாது. நான் உண்மை நகலை Attestation மட்டும்தான் செய்தேன். என்னிடம் கையொப்பம் பெற்ற அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இவ்வழக்கின் சொத்து சம்மந்தமாக பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அ.சா.ஆ.27 மற்றும் அ.சா.ஆ.28 ஆவணங்களில் எங்கு வைத்து கையெழுத்து செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. உரிமையியல் வழக்குகள் நடைபெற்று வருவதால் அ.சா.1 மோசடியாக ஆவணங்களை தயாரித்து என்னிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 என்னிடம் கையொப்பம் பெறவில்லை என்றும், போலீஸ் தான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக முடிவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.